## DEPOSITION OF WITNESS

### (Chapter XXIII Code of Criminal Procedure)

# In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.1, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.158/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.1 வளர்மதி** |
| **Husband Name** | : | **ராமகிருஷ்ணன்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.09.2019

மு.வி:

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது கணவர். சாட்சிகள் 3 முதல 6 வரையிலானவர்களை எனக்கு தெரியும். எனது கணவர் இறந்து சுமார் 3வருடங்கள் இருக்கும். எனது மாமியார் தெய்வம் விபத்தில் இறந்துவிட்டார். சம்பவ தினத்தன்று உசிலம்பட்டி ஏ.டி.எஸ் தியேட்டர் அருகில் உள்ள பேரவை அரங்கத்தில் நடைபெற்ற காதணிவிழாவிற்கு நான் சென்றிருந்தேன். அப்போது விசேச வீட்டிலிருந்த என் மாமியார் மண்டபத்திற்கு வெளியே சென்றபோது எனது மாமியாருக்கு விபத்து ஏற்பட்டது என என்னிடம் தகவல் சொன்னார்கள். நான் மண்டபத்திற்கு வெளியே வந்து பார்த்தபோது எனது மாமியாருக்கு தலையில் அடிபட்டு இருந்தது. சாட்சி துரைப்பாண்டியன் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி எனது மாமியாரை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது மாமியாருக்கு தீவிர சிகிச்சை அளிப்பதற்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனது மாமியார் 2நாட்கள் சிகிச்சைக்கு பிறகு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்து விட்டார். நான் மண்டபத்திலிருந்து வெளியே சென்று என் மாமியாரை பார்த்தபோது என் மாமியாரை இடித்ததாக சொல்லும் கார் அங்கு இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என் கணவர் ராமகிருஷ்ணன்

கையெழுத்து ஆகும். புகார் மனுவில் உள்ள எனது கணவரின் கையெழுத்து **அசாஆ1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

பேரவை அரங்கு மதுரை-தேனி ரோட்டில் 100மீ வடக்கே தள்ளி உள்ளது என்றால் சரிதான். நான் விசேசவீட்டில் இருக்கும் போது விபத்து பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தேன். விபத்து நடந்ததை நான் கண்ணால் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

/Sd./Valarmathi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. K.S.Rajeshkumar
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.